**வென்னப்புவ பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தம்பர் 19 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வென்னப்புவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டில் கிடைக்க வேண்டிய தொகையொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 451,844 ஆன தொகை நாட்குறிப்பு பதிவொன்றின் மூலம் பதிவழிக்கும் போது காசேட்டிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஏலவிற்பனை செய்யப்பட்ட காணிகளிலிருந்து பொது நடடிக்கைகளுக்காக கிடைத்திருந்த ரூபா 175,000 பெறுமதியான 03 காணித்துண்டுகளின் பெறுமதி காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 496,000 பெறுமதியான 05 இயந்திர உருப்படிகள் மற்றும் ரூபா 1,276,866 பெறுமதியான 31 தளபாட மற்றும் உபகரண உருப்படிகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதவரிக்காக கிடைக்க வேண்டிய ரூபா 525,247 தொகையான பிடியாணை மற்றும் தண்டப்பணம் கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 11 கணக்கு விடயங்களுக்குரிய சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணைகள் / பயன்பாட்டுப் பதிவேடுகள் பிரகாரமான மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே ரூபா 61,909,107 ஆன வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் மொத்த நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கிற்கு இடையே ரூபா 1,586,790 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டன.

**1.3.3 தொங்கல் கணக்கு**

2014 திசெம்பர் மாதம் முதல் மாதாந்த வங்கிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 384,602 ஆன தொங்கல் கணக்கு மற்றும் ரூபா 33,955 ஆன மதிப்பிழந்த காசோலையாக குறிப்பிடப்பட்ட பெறுமதி, இணங்காணப்பட்டு சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 199,633,143 பெறுமதியான காணி கட்டிடங்களுக்கான ஆவணங்கள் / உரித்துகள் / கையளித்தல் பத்திரங்களும் ரூபா 61,239,698 தொகையான 15 நாட்குறிப்புகளுக்கான விபரங்களும் அட்டவணைகளும் ரூபா 279,568,740 தொகையான சொத்துக்கள் மற்றும் ரூபா 134,385,829 தொகையான கடன்கொடுத்தோருக்கான அட்டவணைகள், காலப்பகுப்பாய்வு மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட ஆவணங்கள் போன்ற சான்றுகள் இல்லாமை காரணமாக அவற்றைக் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

(ஆ) அல்பட் பீரிஸ் விளையாட்டரங்கில் நிர்மாணிக்கப்பட்ட நீர்த் தடாகத்தின் திட்டம், மதிப்பீடு உள்ளடக்கப்பட்ட கோவை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) புறகெமும செயற்திட்டத்திற்குரிய வங்கிக் இணக்க விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

பின்வரும் இணக்கமின்மை அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| (i) 136 ஆம் பிரிவு | சபைக்குச் சொந்தமான குத்தகைக்கு வழங்கப்பட்ட ஆதனங்கள் தொடர்பாக ரூபா 4,922,213 பெறுமதியான மற்றும் ரூபா 317,967 தொகையான ஏக்கர் வரி என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) 149 ஆம் பிரிவு | அனுமதிப்பத்திரக் கட்டணத்தின் பேரில் பெறுமதி சேர் வரி, தேசத்தை கட்டியெழுப்பும் வரி மற்றும் முத்திரை வரியாக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 244,780 மற்றும் ரூபா 214,648 அறவிடப்பட்டிருகக்வில்லை. |
| (iii) 159(1) ஆம் பிரிவு | சபை ஆதனங்களை குத்தகைக்கு வழங்கியதன் பேரில் அறவிடப்பட வேண்டிய ரூபா 2,273,935 ஆன நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் | |
| (i) விதி இலக்கம் 10(8) | சபைக்கு சொந்தமான மூன்று ஆதனங்கள் காணாமல் போனதன் மூலம் ஆதனங்கள் தொடர்பான பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ii) விதி இலக்கம் 33 | வீதி வரி கொடுப்பனவை தவிர்க்கும் நபர்கள் தொடர்பான பட்டியல் மற்றும் ஆதனங்களை தடை செய்யும் பிடியாணை என்பன ஒவ்வொரு ஆண்டு இறுதியின் போதும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 42 ஆம் பிரிவு | வீதி வரி அறிவித்தல் மற்றும் கொடுப்பனவுகளுக்குரிய "K" விண்ணப்பம் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) 66 ஆம் பிரிவு | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 150(4) இன் பிரகாரம் செயலாளர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை

| | |
|---|---|
| 2013 ஒக்தோபர் 07 ஆந் திகதிய 21/2013 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 02(ஆ) பிரிவு | வார இறுதி நாட்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் கடமைகளில் ஈடுபட்ட மணித்தியால அளவு கணக்கிடுவதற்காக கடமை பூர்த்தி செய்த நேரங்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 137,039,973 ஆக காணப்பட்டதுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 37,799,622 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகளில் ரூபா 99,240,351 ஆன அதிகரிப்பிற்காக 5 வருமான விடயங்களில் ரூபா 80,127,074 அதிகரிப்பொன்றும் இரண்டு செலவின விடயங்களில் ரூபா 18,506,935 வீழ்ச்சியும் காரணங்களாக இருந்தன.

### 2.3 தொழிற்படு மூலதன முாகமைத்துவம்

பிரதேச சபையின் தொழிற்படு மூலதன விகிதம் 1:4 என்ற பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

### 2.4 வருமான நிருவாகம்

#### 2.4.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் இறுதியின் போது சேகரிக்கப்பட வேண்டிய வீத வரி வருமானத்தில் 33 சதவீதமும் ஏக்கர் வரி வருமானத்தில் 97 சதவீதமும் கடை வாடகை வருமானத்தில் 32 சதவீதமும் குத்தகையிலிருந்து 64 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.4.2 வீதவரி மற்றும் வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிறுகுர்கு பட்டியலிடப்பட்ட வீதவரி தொகையான ரூா 9,221,764 இல் ஆண்டில் 80 சதவீதத்திற்கு சமமான ரூபா 7,345,419 தொகை மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வீதவரி ரூபா 4,922,213 ஆக இருந்ததுடன் வருமான சேகரிக்கும் பொறுப்பு நிறைவேற்றப்படாத நிலைமையொன்று வெளிப்படுத்தப்பட்டது.

**2.4.3 குத்தகை வாடகை**

மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,537,981 ஆன நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4.4 ஏனைய வருமானம்**

வருமான சேகரிப்பிற்குரிய 2015 நவம்பர் 06 ஆந் திகதிய 1940 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரத்தின் பிரகாரம் வியாபார கண்காட்சி தற்காலிக கூடங்களிலிருந்தும் முச்சக்கர வண்டி நிறுத்திவைத்தலுக்கான கட்டணங்களும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4.5 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

வட மேல் மாகாண பிரதம செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 17,525,533 ஆன நீதிமன்றத் தண்டப்பணமும் ரூபா 77,457,174 ஆன முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.4.6 மிகை அறவீடு**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(3) பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விதிக்கப்பட்ட மிகை அறவீட்டின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த மிகை அறவீடுகளின் பெறுமதி ரூபா 326,335 ஆக இருந்தன.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அபிவிருத்தி திட்டங்களின் பிரகாரம் ரூபா 19,200,000 மதிப்பீட்டுப் பெறுமதியான 07 செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் வேலை ஆரம்பிக்கப்பட்ட 114 செயற்திட்டங்களில் 24 இன் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 606,033 மற்றும் ரூபா 58,617 ஆன மீதிகள் காணப்பட்ட இரண்டு நடைமுறைக் கணக்குகள் முறையே 2014 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் பின்னர் செயலற்ற நிலைமைக்கு உட்பட்டிருந்தன.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 6,390,000 தொகையான RX- 0105 ஆம் இலக்க கலி பௌசர் வண்டி 2017 ஏப்ரல் 28 ஆந் திகதி வரை பிரதேச சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் பல்வேறு செயற்பாடுகளுக்கான நடாத்திச் செல்லப்பட்ட 14 வகையான வியாபாரங்களால் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 1,877,845 ஆன கிடைக்க வேண்டிய வீதவரி, ஏக்கர் வரி மற்றும் கடை வாடகை வருமானம் திரண்ட நிதிக்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தன.

(ஆ) CFL மின்குமிழ் கொள்வனவினால் ரூபா 396,360 ஆன நட்டம் சபைக்கு ஏற்பட்டிருந்தது.

### 3.5 ஒப்பந்த நிர்வாகம்

**வென்னப்புவ அல்பட் பீரிஸ் விளையாட்டரங்கின் நீச்சல் தடாகத்தை நிர்மாணித்தல்**

நீச்சல் தடாகங்களின் நியம ஆழம் தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் 1.7 மீற்றர் ஆழத்தில் மண் அகற்றப்பட்டதன் பின் நீச்சல் தடாக மதியுரையாளரின ஆலோசனைகளின் பேரில் அந்த ஆழத்தை 1.35 மீற்றர் வரை குறைப்பதற்காக மீண்டும் மண் நிரப்புவதற்கு சபை நிதியத்திலிருந்து ரூபா 3,242,716 விளைவற்ற வகையில் செலவிடப்பட்டிருந்தது.

### 3.6 திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த திண்மக் கழிவுப் பொருள் திட்டத்தின் பிரகாரம் ரூபா 325,000 தொகையான 10 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) கழிவுப் பொருள் சேகரித்தல் 05 அதிகாரப் பிரதேசங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் சபை அதிகாரப் பிரதேசத்தில் 02 வைத்தியாசாலைகள் மற்றும் வெவ்வேறு வகையிலான கைத்தொழிற்சாலைகள் பாரியளவில் காணப்பட்ட போதிலும் அவற்றிலிருந்து கழிவுப் பொருள் சேகரிப்பொன்று இடம் பெறவில்லை.

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் பாதீட்டில் பல செலவின விடயங்கள் தொடர்பில் மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடு நூறு சதவீதம் சேமிக்கப்பட்டிருந்ததுடன் சபை அதிகாரப் பிரதேசத்தில் வசிக்கும் பொது மக்களினால் நலன்புரிக்காக 32 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 4,150,000 நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டோ ஏனைய வேலை விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தமையால் உரிய சேவைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூலதன செலவினங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 85,900,000 இல் ரூபா 59,420,000 சேமிக்கப்பட்டிருந்தது. இது மொத்த நிதிஏற்பாட்டில் 70 சதவீதமாக இருந்தது.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4.21 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு பரிசோதனையொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

**4.4. தீர்வு செய்யப்படாத மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு விசாரணைகள்**

முன்னைய ஆண்டின் போது இனங்காணப்பட்ட பின்வரும் நட்டங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

i. சபைக்குச் சொந்தமான ரூபா 156,550 பெறுமதியான கொங்கிரீட் கலவை காணாமல் போனமை.
ii. சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் வெளித்தரப்பினருக்கு இலவசமாக கையளிக்கப்பட்டதால் ஏற்பட்ட ரூபா 255,000 ஆன நட்டம்
iii. காணாமல் போன ரூபா 177,100 பெறுமதியான 161 கல்வனைஸ் குழாய்கள்

**05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் | காணி மற்றும் கட்டிடங்கள் உட்பட உரிய நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இருப்புக் கட்டுப்பாடு | இருப்பு பதிவேட்டில் காணப்படும் மீதிகள் கணக்குகளுக்கு கொண்டு வரும் போது விட்டுவிடல் இடம்பெற்றிருந்தமை. |
| (இ) கடன்கொடுத்தோர். | நானாவித கடன்கொடுத்தோர் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் இனங்காணக்கூடிய வகையில் ஏடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) ஒப்பந்த நிர்வாகம் | இலக்கிடப்பட்ட ஒப்பந்தங்கள் பாரியளவில் மேற்கொள்ளப்படாமல் இருந்தன. |
| (உ) பாதீடு தயாரித்தல் | மீளாய்வாண்டிற்காக அதிகமான நூலக நலன்புரி நடவடிக்கைகள் மற்றும் மூலதன நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் தேவையற்ற வகையில் நிதி ஏற்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) கணக்கீடு | பிரதேச சபை வி திகளின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய பி.ச அறிக்கை நேரத்திற்கு தயாரித்தல், பரீட்சித்தல், கண்காணித்தல் மற்றும் கணக்குப் பிரிவிற்கு சரியாக தொடர்புபடுத்துதல் இடம் பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (எ) கழிவுப்பொருள் முகாமைத்துவம் | பிரதேச சபை பிரதேசத்தில் வைத்தியசாலைகள் மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்கள் மற்றும் அதிகாரப் பிரதேசத்தில் 07 வலயங்களில் கழிவுகளுடன் நாளாந்தம் திறந்த சுற்றாடலுக்கு விடுவிக்கப்படல். |